சினிமா கவர்ச்சியை மட்டும் வைத்து விஜய் அரசியலில் வெற்றி பெற முடியாது

சென்னை, ஜூன் 10: மதிமுக முதன்மைச் செயலாளர் துரை வைகோ எம்.பி. நேற்று அளித்த பேட்டி:

விஜய் உச்சபட்ச நட்சத்திரம். அவர் களத்திற்கு வரவேண்டும். மக்களின் பிரச்னைக்காக போராட வேண்டும். பல முறை களத்தை சந்தித்து அனுபவம் பெற வேண்டும். சினிமா கவர்ச்சி மட்டும் வைத்துக்கொண்டு அரசியலில் வெற்றி பெற முடியுமா என்றால் அது முடியாது. தனது எதிரி மதவாத கட்சிகள் தான் என்கின்றார்.

மதவாத கட்சிகள் தமிழகத்தில் காலூன்றாமல் இருக்க வேண்டும் என்றால், அதற்கு ஏற்ற வகையில் செயல்பட வேண்டும். இப்போது வரை அவர் தனித்து தான் இருக்கின்றார்.

பாமக உள் கட்சி விவகாரம் குறித்து கருத்துச் சொல்ல விரும்பவில்லை. அந்த கட்சிக்குள் ஏற்படும் கருத்து முரண்பாடுகளை மூத்தவர்கள், நிர்வாகிகள் பேசி தீர்ப்பார்கள். மாற்றுக்கட்சியினர் கருத்து சொல்வது முறையல்ல. இவ்வாறு அவர் கூறினார்.

நெடுஞ்சாலை, எரிசக்தி உள்ளிட்ட துறை அமைச்சர்களுடன்

முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை

▶ முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை மற்றும் பொதுப்பணித்துறை ஆகிய துறைகளின் சார்பில் சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

சென்னை, ஜூன் 10: முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் சென்னை, தலைமை செயலகத்தில் நேற்று நெடுஞ்சாலை, எரிசக்தி, கூட்டுறவு, உணவு துறை அமைச்சர்களுடன் ஆலோசனை கூட்டம் தலைமை செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

தமிழகத்தில் அடுத்த ஆண்டு சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ள நிலையில் அரசியல் கட்சிகள் தீவிரமாக கூட்டணி கட்சிகளுடன் இணைந்து வியூகம் வகுத்து வருகின்றன. ஆளும் திமுகவை பொறுத்தவரை, 8 மண்டல பொறுப்பாளர்கள், 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் தொகுதி பார்வையாளர்களை நியமித்து தமிழகம் முழுவதும் கூட்டங்களை நடத்தி வருகிறது.

மதுரையில் நடைபெற்ற பொதுக்குழுவில் முதல்வர் மு.க.ஸ்டாலின், 'ஓரணியில் தமிழ்நாடு' என்னும் இயக்கத்தை தொடங்கி கட்சியில் புதிய உறுப்பினர்களை சேர்க்க வேண்டும் என கட்சியினருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். இதன் தொடர்ச்சியாக திமுக மாவட்ட செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள் கூட்டம் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் காணொளி மூலம் நடைபெற்றது.

தலைமை செயலகத்தில் நடந்தது

இந்நிலையில் நேற்று காலை 11 மணியளவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் துறை சார்பான ஆலோசனை கூட்டம் சென்னை தலைமை செயலகத்தில் நடைபெற்றது. இந்த ஆலோசனை கூட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், நெடுஞ்சாலை துறை, சிறு துறைமுகங்கள் துறை, மின்சாரத்துறை மற்றும் போக்குவரத்து துறை, உணவு மற்றும் கூட்டுறவுத்துறை உள்ளிட்ட பல்வேறு துறை சார்பான ஆலோசனை கூட்டத்தில் அமைச்சர்கள் எ.வ.வேலு, பெரியகருப்பன், சக்கரபாணி, சிவசங்கர் மற்றும் தலைமை செயலாளர் முருகானந்தம், நிதித்துறை செயலாளர் உதயச்சந்திரன், துறை சார்பான செயலாளர்கள், அதிகாரிகள் கலந்து கொண்டனர். இந்த கூட்டம், ஒவ்வொரு துறை சார்பில் தனித்தனியாக நடைபெற்றது.

இந்த கூட்டத்தில், தமிழக சட்டப்பேரவையில் கடந்த கூட்டங்களில் துறை சார்பாக நடைபெற்ற மானிய கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்ட திட்டங்களின் தற்போதைய நிலை, எந்தெந்த திட்டங்கள் செயல்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது, முடிந்த திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு பணிகள் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அமைச்சர்கள் மற்றும் துறை செயலாளர்களுடன் விவாதித்தார். தமிழகத்தில் 2026ம் ஆண்டு மே மாதம் சட்டமன்ற பொதுத்தேர்தல் நடைபெற உள்ள நிலையில், அறிவிக்கப்பட்ட பணிகளை விரைந்து முடித்து, முக்கிய திட்டங்களை மக்களின் செயல்பாட்டுக்கு விரைவில் கொண்டு வர வேண்டும் என்று முதல்வர் அறிவுறுத்தினார்.

தமிழ்நாட்டில் மாநிலங்களவை தேர்தல்

வேட்புமனு தாக்கல் நிறைவடைந்தது

சென்னை, ஜூன் 10: தமிழ்நாட்டில் காலியாகும் 6 மாநிலங்களவை எம்.பி.க்களுக்கான தேர்தல் தேதியை இந்திய தேர்தல் ஆணையம் கடந்த மாதம் அறிவித்திருந்தது. அதன்படி, தற்போது மாநிலங்களவை எம்.பி.யாக உள்ள திமுகவை சேர்ந்த வில்சன், சண்முகம், அப்துல்லா, மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, அதிமுகவை சேர்ந்த சந்திரசேகரன், பாமக தலைவர் அன்புமணி ஆகிய 6 பேரின் பதவிக்காலம் ஜூலை 24ம் தேதியுடன் நிறைவடைகிறது. இதையடுத்து அந்த 6 மாநிலங்களவை உறுப்பினருக்கான தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டது.

அதற்கான வேட்புமனு தாக்கல் கடந்த 2ம் தேதி தொடங்கியது. நேற்று (9ம் தேதி) மாலை 3 மணியுடன் மனு தாக்கல் நிறைவடைந்தது. இன்று வேட்புமனுக்கள் பரிசீலனை நடைபெறுகிறது. வரும் 12ம் தேதி (வியாழன்) மாலை வரை மனுக்களை திரும்பப் பெற வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் போட்டியிருந்தால் வரும் 19ம்தேதி தேர்தல் நடைபெறும்.

இந்த தேர்தலில் திமுக சார்பில் வழக்கறிஞர் வில்சன், கவிஞர் சல்மா, எஸ்.ஆர்.சிவலிங்கம் மற்றும், மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன், ஆகியோர் கடந்த 6ம் தேதி வேட்புமனு தாக்கல் செய்தனர். அதேபோல, கடந்த 6ம் தேதி பிற்பகல் அதிமுக சார்பில் ஐ.எஸ். இன்பதுரை, ம.தனபால் ஆகியோர் வேட்புமனு தாக்கல் செய்தனர். இதுதவிர 3 சுயேட்சை வேட்பாளர்களும் மனு தாக்கல் செய்துள்ளனர்.

ஒரு வேட்பாளருக்கு 10 எம்எல்ஏக்கள் முன்மொழிய வேண்டும். அரசியல் கட்சிகள் சார்பில் போட்டியிடும் 6 வேட்பாளர்களுக்கும் திமுக, அதிமுக எம்எல்ஏக்கள் தலா 10 பேர் முன்மொழிந்துள்ளனர். சுயேட்சை வேட்பாளர்கள் 3 பேருக்கும் ஒரு எம்எல்ஏ கூட முன்மொழியவில்லை. அதனால், இன்று வேட்புமனு பரிசீலனை நடைபெறும்போது இந்த 3 மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டு விடும். அரசியல் கட்சி வேட்பாளர்களின் 6 மனுக்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

இந்த நிலையில், வேட்புமனு தாக்கல் நிறைவடைந்து வேட்புமனு பரிசீலனை நடைபெற்று, இறுதி வேட்பாளர் பட்டியல் வருகிற 12ம் தேதி மாலை 3 மணிக்கு வெளியிடப்படும். அன்றைய தினமே திமுக, அதிமுக சார்பில் வேட்புமனு தாக்கல் செய்துள்ள 6 பேரும் போட்டியின்றி தேர்வு செய்யப்படுவதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும்.

6 பேரும் ஒருமனதாக தேர்வாகின்றனர்

▶ வில்சன்

▶ எஸ்.ஆர்.சிவலிங்கம்

▶ கவிஞர் சல்மா

▶ கமல்ஹாசன்

▶ ஐ.எஸ்.இன்பதுரை

▶ ம.தனபால்

8ம் வகுப்பு மாணவிக்கு பாலியல் தொல்லை

அரசு சேவை இல்ல காவலாளி கைது

சென்னை, ஜூன் 10: 8ம் வகுப்பு மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த அரசு சேவை இல்ல காவலாளியை போலீசார் கைது செய்தனர்.

தாம்பரம், சானிடோரியம், ஜட்ஜ் காலனி பகுதியில் தமிழ்நாடு அரசின் சமூக நலத்துறை சார்பில் அரசு சேவை இல்லம் செயல்பட்டு வருகிறது. இதில், கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் தாலுகாவை சேர்ந்த 13 வயது சிறுமி கடந்த 5 நாட்களுக்கு முன்பு சேர்ந்து குரோம்பேட்டையில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலை பள்ளியில் 8ம் வகுப்பு படித்து வருகிறார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் அதிகாலை சேவை இல்லத்தில் சிறுமி தூங்கி எழுந்து வரும் போது மர்ம நபர் ஒருவர் அவரை பாலியல் துன்புறுத்தல் செய்ய முயன்றுள்ளார். மாணவி அலறி எதிர்ப்பு காட்டவே அந்த நபரை மாணவியை கொடூரமாக தாக்கி உள்ளார். இதில் மாணவிக்கு கால் முறிவு ஏற்பட்டது. மாணவியின் அலறல் சத்தம் கேட்டு ஆட்கள் வருவதற்குள் மர்ம நபர் அங்கிருந்து தப்பினார். மாணவி மீட்கப்பட்டு சென்னை ராஜிவ் காந்தி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இதுகுறித்து தகவல் அறிந்து வந்த சிட்லபாக்கம் அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் அரசு சேவை மையத்தில் உள்ள கண்காணிப்பு கேமரா காட்சிகளை ஆய்வு செய்தனர். மேலும், வழக்கு பதிந்து விசாரித்தனர். இதில் சேவை இல்ல காவலாளி மேத்யூ(49) தான் இச்செயலை செய்தது தெரிய வந்தது. மாணவியும் அவரை அடையாளம் காட்டினார்.

இதனைத்தொடர்ந்து போலீசார் மேத்யூவை போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். நீதிமன்ற உத்தவின்படி மேத்யூவை போலீசார் சிறையில் அடைத்தனர். காவலாளி மேத்யூ அரசு சேவை இல்லத்தில் உள்ள வேறு ஏதாவது மாணவிகளிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டாரா என்பது குறித்து அரசு சேவை இல்லத்தில் தங்கி உள்ள மற்ற மாணவிகளிடம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் சிட்லபாக்கம் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

மதுரையில் முருக பக்தர்கள் மாநாடு

காவல்துறை தரப்பு கேள்விகளுக்கு எழுத்துபூர்வ பதில் அளிக்க வேண்டும்

ஐகோர்ட் கிளை உத்தரவு

மதுரை ஜூன் 10: மதுரையைச் சேர்ந்த வழக்கறிஞர் முத்துகுமார், ஐகோர்ட் மதுரை கிளையில் தாக்கல் செய்த மனு: இந்து முன்னணி சார்பில் வரும் 22ம் தேதி மதுரை ரிங் ரோடு, பாண்டிகோவில் அருகில் உள்ள திடலில் ஆன்மிக மாநாடு நடைபெறுகிறது. இந்த வளாகத்திற்குள், முருக பெருமானின் அறுபடைவீடு திருக்கோவில்களின் தற்காலிக மாதிரி அமைப்புகள் அமைக்கப்பட உள்ளது. இதில் பூஜைகள், நிகழ்ச்சிகள் நடத்தி 22ம் தேதி மாநாடு நடத்த உள்ளோம். இதற்கு அனுமதி வழங்குமாறு உத்தரவிட வேண்டும். இவ்வாறு கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதி பி.புகழேந்தி முன் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அரசு தரப்பில், "12 நாள் நிகழ்ச்சி நடத்துவதற்கு அனுமதி வழங்க முடியாது. 3 நாள் நிகழ்ச்சிகள் நடத்திக் கொள்ள பரிசீலிக்கப்படும். மனுதாரர் தரப்பில் அனுமதி கோரிய விண்ணப்பத்தில் முறையான தகவல் தரவில்லை. மனு அளித்த பின்பு காவல்துறை தரப்பில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு முறையான பதில் இல்லை. நிகழ்ச்சியில் எத்தனை நபர்கள் கலந்து கொள்வார்கள்? முக்கிய பிரமுகர்கள் யாரும் கலந்து கொள்கிறார்களா என்ற கேள்விக்கு பதில் தர மறுத்து விட்டனர். அவ்வாறு இருக்கக்கூடிய நிலையில் நிகழ்ச்சிக்கு எவ்வாறு போதிய பாதுகாப்பு வழங்க முடியும். பெங்களூரு கிரிக்கெட் மைதானத்தில் நடந்த சம்பவம் போன்று நடந்தால் என்ன செய்வது?" என தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து நீதிபதி, "இந்து முன்னணி தரப்பில் நடத்தப்படும் நிகழ்ச்சிகள் ஆகம விதிமுறைகளை பின்பற்றி நடத்தப்படுகிறதா" என கேள்வி எழுப்பினார். மனுதாரர் தரப்பில், ஆகம விதிகளை பின்பற்றி தான் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது என தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து நீதிபதி, "மாநாடு, பொதுக்கூட்டம், தனியார் நிகழ்ச்சிகள் எதுவாக இருந்தாலும் காவல்துறையினர் பயன்படுத்தப்படுகின்றனர். எனவே, போலீஸ் பாதுகாப்பு கேட்கும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் குறிப்பிட்ட தொகையை செலுத்த ஏன் உத்தரவு பிறப்பிக்கக் கூடாது? காவல்துறை தரப்பில் கேட்கப்படும் கேள்விகளுக்கு முறையாக பதில் அளித்தால் தானே உரிய பாதுகாப்பு வழங்க முடியும். மாநாட்டுக்கு அனுமதி கோரிய மனு தொடர்பாக காவல்துறையினரிடம் எழுத்துப் பூர்வமாக பதில் அளிக்க வேண்டும். அதன் அடிப்படையில் காவல்துறை 12ம் தேதிக்குள் முடிவெடுத்து நீதிமன்றத்தில் தெரிவிக்க வேண்டும். மாநாட்டுக்கான முன் ஏற்பாடுகளை செய்யலாம். ஆனால், எவ்வித பூஜைகளும் செய்யக் கூடாது" எனக் கூறி, விசாரணையை 13ம் தேதிக்கு தள்ளி வைத்தார்.

TICEL BIO PARK LTD
(TIDCO Centre for Life Science)
CIN: U45309TN2001PLC047979
No.5, CSIR Road, Taramani, Chennai - 600 113. Ph: +91 44 2254 2060,
Email: md@ticelbiopark.com / mo@ticelbiopark.com

Date: 10.06.2025

TICEL invites e-Tender for the following services at TICEL Bio Park - I & II, Chennai.

Sl. No.	e-Tender No.	Name of the Tender	Tender Closing Date & Time
1.	E-TENDER No. TICEL/2025-26/03	E-TENDER for Supply, Installation, Testing and Commissioning of 2 Nos. of 170 TR Air Cooled Chillers and associated Low side Works for the existing ACMV System in Bio Park-I at TICEL BIO PARK LIMITED, Chennai	14.07.2025 before 3.00 P.M.
2.	E-TENDER No. TICEL/2025-26/04	E–TENDER for "Supply, Installation, Testing and Commissioning of 1 No. 11KV & 2500 KVA Transformer and associated Electrical Works for the existing Electrical (HT&LT) System at TICEL BIO PARK Limited, Chennai	14.07.2025 before 3.00 P.M.

For more details and participation in the above e-tender, please visit the website **https:/www.tntenders.gov.in/**. Tender document will be available in the e-portal on **12.06.2025.** Last date for online submission of duly filled tender documents is **14.07.2025 on or before 3.00 p.m.** TICEL Bio Park Ltd reserves the right to accept / reject any one / all tenders without assigning any reason.

DIPR/2901/Tender/2025 **Managing Director**

அவான்ஸ் பைனான்சியல் சர்வீஸஸ் லிமிடெட் AVANSE FINANCIAL SERVICES

பதிவு முகவரி: E பிரிவு 4ஆவது தளம், டைம்ஸ் ஸ்கொயர், அந்தேரி–குர்லா சாலை, காம்தேவி, மரோல், அந்தேரி கிழக்கு, மும்பை, மகாராஷ்டிரா 400059.
கிளை முகவரி: அவான்ஸ் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்., எண் 309, 2ஆவது தளம், பே சிட்டி சென்டர், பூந்தமல்லி நெடுஞ்சாலை, மாருதி காபிகோ ஷோரூம் மேலே, கீழ்ப்பாக்கம், சென்னை, தமிழ்நாடு 600010

விற்பனை அறிவிப்பு/ மின்–ஏலம்

(கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 8(6) மற்றும் விதி 9(1) கீழ்)

கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல் மற்றும் நிதிச் சொத்துகளை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம், 2002 உடன் படிக்கவும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002, விதி 8 (6) மற்றும் விதி 9 (1)–ன் கீழ் 02வது மின்–ஏலம் அசையா சொத்துகளை விற்பனை செய்வதற்கான 15 நாட்கள் விற்பனை அறிவிப்பு

இதன்மூலம் பொதுமக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் உப–கடன்தாரர்(கள்), அல்லது அவர்களின் சட்டப்பூர்வ வாரிசுகள் / பிரதிநிதிகளுக்கு வழங்கப்படும் 15 நாட்கள் அறிவிப்பாவது, கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்து ஈடுபெற்றுக் கடனளித்த நிறுவனத்திடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ள, 11 நவம்பர், 2024 அன்று அவான்ஸ் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட் (AFSL)–ன் அதிகாரப்பூர்வ அலுவலரால் கவாதீனம் எடுக்கப்பட்ட சொத்தானது, கடன்தாரர்: செயின்ட் மேரீஸ் எஜுகேஷனல் டிரஸ்ட் (அதன் மேலாண்மை அறங்காவலர்கள் மூலம்), உப கடன்தாரர்கள்: அனிதா. A, ராபர்ட் தெயக்குமார் ஆகியோரிடமிருந்து ஈடுபெற்றுக் கடனளித்த அதுவது, அவான்ஸ் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட் நிறுவனத்துக்கு சேர வேண்டிய **31 அக்டோபர் 2023 தேதிப்படியான நிலுவைத்தொகை ரூ.6,39,00,378/– (ரூபாய் ஆறு கோடியே முப்பத்தொன்பது லட்சத்து முன்னூற்று எழுபத்தெட்டு மட்டும்)** மற்றும் 1 நவம்பர் 2023 –லிருந்து மேல் வட்டி மற்றும் கூடுதல்/அபராத வட்டி ஆகியவற்றுடன் சேர்த்து திரும்பப் பெறுவதற்காக, **"உள்ளது உள்ள இடத்தில்", "என்ன உள்ளதோ அது", "உள்ளவை எவையோ அவை"** மற்றும் **"எவ்வித உத்தரவாதமும் இல்லாத"** அடிப்படையில் **26.06.2025 அன்று விற்பனை செய்யப்படும்.**

கடனீட்டு சொத்தின் விவரம்	சுவாதீன வகை	நிர்ணயவிலை (ரூ) கூடுதல் தொகை	முன்வைப்புத் தொகை (ரூ)	பார்வையிடும் தேதி
அனைத்து துண்டு மற்றும் பகுதிகள் கொண்ட நிலம் மற்றும் கட்டடம். அமைவிடம் – வேம்பார் கிராமம், வேம்பார் தெற்கு பஞ்சாயத்து வார்டு எண்.1, வேம்பார் கிராமம், விளாத்திகுளம் ஒன்றியம், விளாத்திகுளம் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம், பரப்பளவு 621 சதுர அடி, மேற்குப் பாக நிலம், பழைய நத்தம் சர்வே எண் 243/2, புதிய நத்தம் சர்வே எண் 326/7. இது விளாத்திக்குளம் சார்பதிவு மாவட்டத்துக்கும் தூத்துக்குடி பதிவு மாவட்டத்துக்கும் உட்பட்டது. எல்லைகள் பின்வருமாறு: கிழக்கு: தெரு, மேற்கு: சிங்கராஜின் சொத்து மற்றும் பொது கவர், வடக்கு: வழிப்பாதை, தெற்கு: ராஜாமணி அவர்களின் சொத்து, பரப்பளவு: அளவீடு வடக்குப் பக்கம்: 23–1/4 அடி, தெற்குப் பக்கம்: 24–1/2அடி, கிழக்குப் பக்கம்: 26 அடி, மேற்குப் பக்கம்: 26 அடி, மொத்தப் பரப்பளவு 621 ச.அடிக் கொண்ட நிலம் மற்றும் கட்டடம் உட்பட.	கையக	Rs. 10,94,130/-	Rs. 1,09,413/-	23rd and 24th June 2025 between 11.00 am to 01.00 pm.
அனைத்து துண்டு மற்றும் பகுதிகள் கொண்ட நிலம் மற்றும் கட்டடத்தின் மேற்குப் பாகம். அமைவிடம் – வேம்பார் கிராமம், விளாத்திக்குளம் ஒன்றியம், விளாத்திக்குளம் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம், பரப்பளவு 1 ஏக்கர் 49 செண்ட் கொண்ட நிலம், சர்வே எண்.255/1, மொத்தப் பரப்பளவு ஷெக் 3.63.0–இன் தெற்குப் பக்கத்தில் அடங்கியது. இது விளாத்திக்குளம் சார்பதிவு மாவட்டத்துக்கும் தூத்துக்குடி பதிவு மாவட்டத்துக்கும் உட்பட்டது. எல்லைகள் பின்வருமாறு: கிழக்கு: அந்தோணிராஜ் மற்றும் பிறருடைய சொத்து, மேற்கு: நீரோடை, வடக்கு: இருதயமேரி அவர்களின் சொத்து, தெற்கு: கிழக்கு கடற்கரைச் சாலை. பரப்பளவு: மொத்தப் பரப்பளவு 1 ஏக்கர் 49 செண்ட் கொண்ட நிலம் மற்றும் கட்டடம் உட்பட..	கையக	Rs. 93,87,000/-	Rs. 9,38,700/-	23rd and 24th June 2025 between 11.00 am to 01.00 pm.

விற்பனைக்காக அறிவிக்கப்பட்டுள்ள சொத்தின் விவரம் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய தொகை, வட்டி மற்றும் செலவுகள் (விற்பனைக்கான செலவு உட்பட) 'அதிகாரப்பூர்வ அலுவலருக்கு' செலுத்தப்பட்டால் அல்லது அத்தகைய ஈட்டுறுதிக் கடன், வட்டி மற்றும் செலவுகள் செலுத்தப்பட்டதற்கான சான்று வழங்கப்பட்டால் இவ்விற்பனை நிறுத்தப்படும். விற்பனைக்காக பொதுமக்கள் தங்கள் டெண்டரை தனிப்பட்ட முறையில் சமர்ப்பிக்க அழைக்கப்படுகிறார்கள். விற்பனைத் தொடர்பாக பணியைச் செயல்படுத்திக் கொண்டிருக்கும் அலுவலர் அல்லது பிற நபர், விற்கப்படும் சொத்தில் ஏதேனும் உரிமையைக் கைப்பற்ற அல்லது கைப்பற்ற முயற்சிக்க நேரடியாக அல்லது மறைமுகமாக ஏலப்புள்ளி அளிக்கலாகாது.

கடன்தாரர் **அவான்ஸ் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட். (AFSL)–க்கு** செலுத்த வேண்டிய தொகையை விற்பனை தேதிக்கு முன்னர் முழுமையாக செலுத்தினால், விற்பனை நிறுத்தப்படும். விற்பனையானது கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002–கீழ் பரிந்துரைக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் பின்வரும் கூடுதல் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இருக்கும்:

மின்–ஏலம், https://sarfaesi.auctiontiger.net இணையதளம் அல்லது ஆக்சன் டைகர் மொபைல் செயலி (ஆண்ட்ராய்டு) மூலம் மற்றும் **26.06.2025 அன்று பிற்பகல் 2.00 மணி முதல் 3.00 மணி வரை** எங்கள் சென்னை கிளை அலுவலகத்தில் தலா 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்புடன் நேரடியாகவும் நடைபெறும்.

1. கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் கீழே கையொப்பமிட்டவருக்கு கிடைத்த சிறந்த தகவலின் அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் இந்த அறிவிப்பில் ஏதேனும் பிழை, தவறான அறிக்கை அல்லது விடுபடுதல் இருந்தால், அதற்கு கீழே கையொப்பமிட்டவர் பொறுப்பேற்கமாட்டார். ஏலத் தொகையிலோ அல்லது ஏலதாரர் குறித்தோ ஏதேனும் சர்ச்சை ஏற்பட்டால் அந்த சொத்து உடனடியாக மீண்டும் ஏலத்தில் விடப்படும்.
2. சொத்து நிர்ணய விலைக்கு குறைவாக விற்கப்படாது.
3. ஏல உயர்வுத் தொகை ரூ. 25,000/– ஆக இருக்கும்.
4. சொத்தை வாங்குவதற்கான அனைத்து ஏலப்புள்ளிகளுடன் குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையை மேலே குறிப்பிடப்பட்டுள்ளபடி **"அவான்ஸ் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்" நிறுவனத்தின் பேரில் கேட்பு வரைவோலையுடன், அவான்ஸ் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட., எண் 309, 2ஆவது தளம், பே சிட்டி சென்டர், பூந்தமல்லி நெடுஞ்சாலை, மாருதி காபிகோ ஷோரூம் மேலே, கீழ்ப்பாக்கம், சென்னை, தமிழ்நாடு 600010" என்ற முகவரியில் செலுத்தத்தக்க வகையில் மேற்படி 25 ஜுன் 2025 அன்று மாலை 5.00 மணிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.** மேலும், வெற்றி பெறாத ஏலதாரர்களுக்கு கேட்பு வரைவோலை திருப்பி வழங்கப்படும்.
5. உச்சபட்ச ஏலதாரர், சட்டப்பூர்வமாக ஏலம் கேட்பதற்கு தகுதி பெற்றவராகவும், வழங்கப்படும் எந்தவொரு லாட்டிலும் அவரால் ஏலம் கேட்கப்பட்ட தொகை நிர்ணய விலைக்குக் குறையாமலும் இருத்தல் வேண்டும் என்ற நிபந்தனையுடன் அவர் வாங்கியவராக அறிவிக்கப்படுவார். கோரப்படும் விலை போதுமானதாக இல்லை என்று தோன்றினால், உச்சபட்ச விலைப்புள்ளியை ஏற்க மறுக்கும் அதிகாரம் அதிகாரப்பூர்வ அலுவலருக்கு உள்ளது.
6. பதிவுசெய்யப்பட்ட காரணங்களுக்காக, விற்பனையை ஒத்திவைக்க/ நிறுத்த 'அதிகாரப்பூர்வ அலுவலரின்' விருப்பத்திற்கு உட்பட்டது.
7. அதிகாரப்பூர்வ அலுவலரின் (திருமதி. சௌமியா **தியாகராஜன் (மொபைல் எண். 6369045658) மற்றும்/அல்லது திரு. சரவணன் முத்துக்கருப்பன் (மொபைல் எண். 9524241082) ஆகியோரை தொடர்பு கொள்ளவும்.)** முன் அனுமதியின் பேரில் **23 மற்றும் 24 ஜுன் 2025 தேதிகளில் காலை 11.00 மணி முதல் பிற்பகல் 01.00 மணி வரை சொத்தினை பார்வையிடலாம்.**
8. வெற்றிபெற்ற ஏலதாரர் என அறிவிக்கப்பட்டவுடன் கொள்முதல் தொகையில் இருபத்தைந்து சதவீதத்தை (25%) 'அதிகாரப்பூர்வ அலுவலரிடம்' செலுத்த வேண்டும் வைப்புத் தொகை செலுத்த தவறினால், சொத்து உடனடியாக மீண்டும் ஏலத்தில் விடப்பட்டு மறுவிற்பனை செய்யப்படும்.
9. மேற்படி ஆரம்ப வைப்புத்தொகைச் செலுத்தப்பட்டால், செலுத்த வேண்டிய மொத்தப் பணத்தின் மீதித்தொகையானது சொத்து விற்பனை உறுதி செய்யப்பட்ட தேதியிலிருந்து, அந்த நாளை தவிர்த்து 15 நாட்களுக்குள் அல்லது அதற்கு முன்பாக, அல்லது 15ஆவது நாள் ஞாயிற்றுக்கிழமை அல்லது பிற விடுமுறையாக அமைந்தால், 15வது நாளுக்குப் பிந்தைய முதல் அலுவலக நாளில் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் வாங்குபவரால் செலுத்தப்பட வேண்டும். மேலே குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் பணம் செலுத்தத் தவறினால், புதிய விற்பனை அறிவிப்பு வெளியிடப்பட்டு, சொத்து மறுவிற்பனை செய்யப்படும்.. அவான்ஸ் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு செலுத்திய முன்வைப்புத்தொகை பறிமுதல் செய்யப்படும், மேலும் தவறும் வாங்குபவர், சொத்து மீதான அனைத்து உரிமைகளையும் அல்லது பின்னர் விற்கப்படும் தொகையின் எந்தப் பகுதியையும் இழக்க நேரிடும்.
10. சொத்துக்கு பொறுப்பேற்க வேண்டிய, அவான்ஸ் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட் நிறுவனத்துக்கு தெரிந்தவரையில் வில்லங்கங்களின் விவரங்கள்: இல்லை. சொத்து தொடர்பாக முன்வைக்கப்பட்ட உரிமைகோரல்கள் மற்றும் அதன் தன்மை மற்றும் மதிப்பு தொடர்பான வேறு எந்த தகவல்களும் இல்லை. மேற்கூறியவற்றைத் தவிர வேறு எதுவும் இல்லை.
11. மின்–ஏலம் குறித்த விவரங்கள், உதவி, செயல்முறை மற்றும் இணையவழி பயிற்சி ஆகியவற்றிற்கு ஆர்வமுள்ள ஏலதாரர்கள் சேவை வழங்குநரான **E– புரொக்கியூர்மெண்ட் டெக்னாலஜீஸ் லிட்.** நிறுவனத்தை தொடர்பு கொள்ளலாம். பெயர்: ராம் சர்மா, மின்னஞ்சல் முகவரி: **ramprasad@auctiontiger.net** மற்றும் தொடர்பு எண். 9978591888.
12. விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, இணையதளத்தில் வழங்கப்பட்ட இணைப்பைப் பார்க்கவும், அதாவது **https://www.avanse.com/** மற்றும் / அல்லது **https://sarfaesi.auctiontiger.net.**
13. குறிப்பு: ஆர்வமுள்ள ஏலதாரர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய அதிகாரப்பூர்வ அலுவலர்கள்: **சௌமியா தியாகராஜன் (மொபைல் எண் 6369045658 / மின்னஞ்சல் முகவரி: sowmya.thiyagarajan@avanse.com மற்றும் திரு. சரவணன் முத்துக்கருப்பன் (கைப்பேசி எண் 95242 41082) / மின்னஞ்சல் முகவரி: saravanan.muthukaruppan@avanse.com.**

ஒம்/–
இடம்: வேம்பார் (தூத்துக்குடி மாவட்டம்) அதிகாரப்பூர்வ அதிகாரி,
தேதி: 10.06.2025 அவான்ஸ் பைனான்சியல் சர்வீஸஸ் லிமிடெட்

தமிழ்நாடு அரசு
**செ